# DEPOSITION OF WITNESS

---

IN THE COURT OF CHIEF JUDGE, SMALL CAUSES, CHENNAI

**M.C.OP.No.5830/2019** **DATE :13.11.2024**

Deposition of Witness : P.W.1
Name : Mrs. Vijayakumari
Father/Husband Name : Mr. Raghupathi
Age :
Address :
Cell Phone No :

Solemnly affirmed in accordance with the provisions of Oaths Act, 1969 (Act 44 of 1969) of the 13th day of November 2024.

-----------------------------------------------------------------------------------------------

**2வது எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

1. விபத்து குறித்து நான் தான் புகார் கொடுத்தேன். விபத்து சமயத்தில் அந்த பேருந்தில் நான் பயணித்தேன். நின்றுகொண்டிருந்த லாரி மீது பேருந்து மோதியதால் விபத்து ஏற்பட்டது. லாரி நிறுத்தக்கூடாத இடத்தில் நிறுத்தப்பட்டதால்தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. பேருந்து ஓட்டுநர் தூங்கிவிட்டதால்தான் விபத்து ஏற்பட்டது. நான் கண்டக்டர் சீட்டிற்கு பின்னால் அமர்ந்திருந்தேன். நானே தூக்கத்தில் இருந்ததால் ஓட்டுநர் துர்ங்கியதை கவனிக்கவில்லை என்றாலும் நான் பொய்யாக ஓட்டுநர் தூங்கிவிட்டார் என்று சொல்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் இழப்பீடு பெற வேண்டும் என்றால் லாரியின் உரிமையாளரையும் காப்பீடுதாரரையும் தரப்பினராக சேர்த்திருக்கவேண்டும் என்றால் சரியல்ல.

2. 2 முதல் 4 வரையுள்ள மனுதாரர்கள் அனைவருக்கும் விபத்திற்கு முன்பே திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். விபத்திற்கு நிறுத்தப்பட்ட லாரி தான் காரணம் என்பதால் மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. என் கணவரின் வருமானம் குறித்து எந்தவித ஆவணமும் தாக்கல் செய்யவில்லை. வரைபடத்தையும் தாக்கல் செய்யவில்லை.

**மறு விசாரணை** - இல்லை.

Taken down by me/before me in open Court, interpreted/read over to the Witness and admitted by him/her to be correct.
Date:13.11.2024.

Sd/- D. Lingeswaran,
Chief Judge,
Court of Small Causes.